# பணி நிறைவு வாழ்த்து!

**நாள்: 31-03-2023**



கத்தும் கடலோசை கனிவுடன் கேட்குமெங்கள்,
வித்தகமாய் நிறையும் காவிரியின் கடைமடையில்,
சொத்தாக **நாகை** சூடும் **கீழ்வேளூர்** வட்டத்தில்,
தத்துவமாய் **இலுப்பூர்** கிராமத்துச் சீர்மிகு அன்பின்,

வித்தகராம் மாமா **பஞ்சநதம் – இராஜேஸ்வரி** ஈன்ற,
சொத்தாய் மகள்களின் முதல்வியாய் நிறையும்,
சொல்லின் செல்வி **மீனாட்சி** யவளே! பள்ளியில்,
கல்வியை **வடக்காலத்தூர்** தொடங்கி, தேமதுரதமிழ்

கொட்டும் **மதுரை** யிலே கல்லூரிக் கல்வி கொண்டு,
மட்டிலாப் பெருமையுடன் **ஆசிரியப் பணி**யும் கொண்டு,
கிட்டியதாம் அரசுப் பணியுமாகி, **புள்ளியல்** தாங்கிட,
மொட்டவிழும் பூக்களாய் நடை பயிலும் **போக்குவரத்து**ப்,

பெட்டகத்துள் **தமிழ்நாட்டரசின்** பணியில் நிறைந்து,
பெருமை கொள் மணாளனாய்க் கைத்தலம் பற்றிய,
அருந்தவக் கோமான் **இராகவனுடன்** வாழ்ந்து,
பெருந்தவமாய் மணாளன் அன்பில் தோய்ந்து,



பெருமை கொள் பதவி உயர்வும் விலக்கி வாழ,
பெருமகனும் இகவாழ்வை நீக்கி இறையைச் சூட,
அருகிருக்கும் தங்கை இருவர் அன்பில் தோய்ந்து,
பெருமைகொள் அண்ணன் **கல்யாணம்** சீருடன்,

பெருந்தவமாய் வாழும் தங்கை **மீனாட்சி** காணும்,
பணிநிறைவு வாழ்வியலின் அடுத்தக் கட்டமென்போம்!
பணியது நிறைவு யென்றால் பலகாலம் பழகிவந்த,
அணியாக தொடுத்து வாழ்ந்த நிலையது மாறு மென்போம்!

பிணியில்லா வாழ்வைச் சூடி, பிரியமாய் உறவைப் பேணி,
நனிசீர் காலம் இதனை இறைவன் நமக்களித்தானென்றே;
அணியதாய் மனதில் நின்ற ஆக்கங்கள் யாவும் செய்து,
இனிவரும் காலம் யாவும் இன்புற்றே வாழ்தல் வேண்டும்!

என்னவள் இல்லக்கிழத்தி மங்கையுடன் இணைந்தே,
மன்னிய உறவினோடும் மருவிலா அன்பினோடும்,
இன்முக முறுவல் சூடும் இளையவளே நீ வாழ்கவென்று,
இன்றிந்த பணிநிறைவு நாளில் இன்புற்று வாழ்த்துகின்றோம்!



அன்புடன்,
**மங்கையர்க்கரசி &**
**கு.ப.அசோகன்**
**28-03-2023**